[1993 ஏப்ரல் 2

239—

## பூம்புகார் கடற்புறப் பகுதி மீனவர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள்.

* 14703—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கடற்புறப் பகுதி மீனவர்களுக்காக தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூம்புகார் பகுதிக்கென்று செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) பொதுவாக தங்கள் பகுதியில் வீடுகட்டி வழங்கிட ஏதுவாக 3 செண்ட் நிலம் துறை வசம் ஒப்படைக்கும் கடல் மீனவர் குடும்பத்திற்கு தகுதி அடிப்படையில், இலவச வீடு கட்டும் திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே வாழ்கின்ற மீனவர்களுடைய கூரை வீடுகள் இங்கே அடிக்கடி புயல் ஏற்படுகின்ற காலங்களிலும், வெள்ளம் ஏற்படுகின்ற காலங்களிலும் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால், உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், அவர்கள் பாதுகாப்புள்ள, ஒரு சூழ்நிலையிலே வாழ வேண்டுமென்பதற்காகவும் வருடந்தோறும் 2,000 வீடுகள் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் அந்த அடிப்படையிலே, 1993-94ஆம் ஆண்டைப் பொறுத்தபட்டிலே இந்தப் பகுதியிலே அங்கு வசிக்கின்ற மீனவர்கள் அரசிற்கு இலவசமாக 3 சென்ட் நிலம் அளிக்கும் பட்சத்திலே, அந்தக் கருத்திலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.